மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று என்று சொன்னால், 24 மணி நேரம் இருக்கிறது. அதை நன்றாகப் பரிசீலித்துப் பார்த்து, ஆய்வு செய்து முடிவெடுத்திருக்கிறேன். இந்தப் பிரச்னையை எந்த விதியின் கீழ் கொண்டு வர முடியும், எந்த விதியின்கீழ் செய்யலாம் என்று எழுதிக் கொடுங்கள், நான் கவனிக்கிறேன்.

(2) உரிமைப் பிரச்னைகள் (தொடர்ச்சி).

(ஆ) 'மக்கள் செய்தி', 'மாலை முரசு' நாளேடுகள் மீது.—

மாண்புமிகு பேரவைத் தலைவர். : பேரவையின் 184-வது விதியின் கீழ், மாண்புமிகு உறுப்பினர் திரு திருப்பூர் ஆர். மணிமாறன் அவர்கள் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்னையை அவையில் எழுப்ப அனுமதி கேட்டுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

(முற்பகல் 10—20)

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 184-ன் கீழ் அவை உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வருகிறேன்.

1979-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17-ம் தேதியிட்ட "மக்கள் செய்தி"ப் பத்திரிகையில் "தமிழ் நாட்டில் மேலும் இரண்டாயிரம் போலீஸ்; எம்.ஜி.ஆர். தகவல்" என்ற தலைப்பில் மற்றச் செய்திகளையும் திரித்து வெளியிட்டதை நான் அவைக்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"காவல் துறை தீயணைப்புத் துறை மானியக் கோரிக்கையை முதல்வர் எம்.ஜி.ஆர். சட்டசபையில் தாக்கல் செய்தார்" என்ற தலைப்பில் மக்கள் செய்திப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அதே போல் 1979-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17-ம் தேதியிட்ட 'மாலை முரசு' பத்திரிகையில் "கடந்த ஆண்டு துப்பாக்கி சூட்டில் பலியானது 9 பேர்—எம்.ஜி.ஆர். தகவல்—போலீஸ் தீ அணைப்புப் படை பற்றிய மானியக் கோரிக்கை மீது இன்று விவாதம் நடந்தது" என்ற வகையில் செய்தி வெளியிட்டிருக்கிறது.

[திரு. ஆர். மணிமாறன்]

இந்த இரண்டு பத்திரிகைகளும் இந்த அவையில் நடைபெறாத ஒரு கருத்தை நடந்ததாகக் குறிப்பிட்டு செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள். போலீஸ் தீ அணைப்புப் பற்றிய மானியக் கோரிக்கைகள் 1979-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17-ம்

நாளன்று பேரவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. எனவே இந்தப் பத்திரிகைகளில் அவையில் நடக்காத நடவடிக்கை ஒன்றை நடந்ததாக வேண்டுமென்றே பிரசுரித்துள்ளது. இது அவையின் நடவடிக்கைகளைத் தவறாகப் பிரசுரித்தது மட்டுமல்லாமல் அவையின் நடவடிக்கைக்குக் களங்கம் கற்பிக்கிற முறையில் அமையப் பெற்றிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அவைக்கென்று ஒரு மரபு இருக்கிறது, ஒரு பாரம்பரியம் இருக்கிறது, ஒரு கடமை இருக்கிறது, கண்ணியங்கள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் உடைத்தெறிகிற பாங்காக மாலை முரசு பத்திரிகையும் மக்கள் செய்திப் பத்திரிகையும் இம்மாமன்றத்தில் நடக்காத ஒன்றை நடந்ததாக ஏதோ ஒரு கற்பனை ஓட்டத்தில் செய்தியை வெளியிட்டிருப்பது அவையைக் களங்கப்படுத்துவதாக அமைகிறது. உண்மை நிலைகளை மக்கள் முன்னால் படம் பிடித்துக் காட்டும் பொறுப்பு பத்திரிகையாளர்களுக்கு இருக்கிறது. ஆனால் தவறான செய்தியை வெளியிட்டு குழப்ப நிலையை உருவாக்க வழி வகுக்கும் தன்மையில் இந்தப் பத்திரிகைகள் தங்கள் கடமைகளை சரிவரச் செய்யாமல் ஏதோ மாறுபட்ட திசையில் மக்களை அழைத்துச் செல்லும் பாங்கில் இந்தத் தவறான வேண்டாத நடைபெறாத அவையில் நடக்காத இந்தச் செய்திகளைத் திரட்டி வெளியிட்டிருப்பது இந்தச் சபையை மாசுபடுத்துவதாகும் என்று சொல்லி வீதி ஓரத்தில் நடக்கின்ற மானியங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டிருக்கிற காரணத்தால் இந்தப் பத்திரிகைகள் இந்த அவையில் நடைபெறாத நிகழ்ச்சிகளைத் தங்களுடைய கருத்தோட்டத்திற்குக் கொண்டுவர முடியாமல் இப்படிப்பட்ட மரபுகளை எடுத்தெறியும் தன்மையில் ஆளாக்குகின்ற நிலைமையை வளர்க்க வேண்டாம் என்று சொல்லி இது அவை உரிமை மீறல் பிரச்சினையாக இருப்பதால் உரிமைக் குழுவுக்கு விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: எழுப்பப்பட்டுள்ள பிரச்சினை பத்திரிகைகள் மீது இருப்பதால் அந்தப் பத்திரிகையாசிரியர்களிடமிருந்து விளக்கம் பெற்ற பிறகு தீர்ப்பளிக்கிறேன்.*

(இ) தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மீது (தீர்ப்பு).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: மாண்புமிகு உறுப்பினர் திரு உமாநாத் அவர்கள் 1979-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 26-ம்நாளன்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள்மீது ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை எழுப்பினார்கள். 1979-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 27-ம் நாளன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் அளித்தார்கள்.

---

* தேதி தீர்ப்பளிக்கப்பெற்றது.